தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை.

திங்கட்கிழமை, 1977, ஜூலை 25.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப்பேரவை மண்டபத்தில் காலை 10-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று வினாக்கள்-விடைகள் இல்லை.

(1) ஒழுங்குப் பிரச்சினை.

வினாக்கள் இல்லாதது குறித்து.

திரு. ஆர். உமாநாத்: '' லிஸ்ட் ஆஃப் பிஸினஸ் '' பற்றி ஒரு பாயின்ட் ஆஃப் ஆர்டர். 4-ஆம் தேதி இந்த செஷன் ஆரம்பித்திருக்கிறது. இன்று தேதி 25. 21 நாட்கள் ஆகியும் ஒரு '' குவஸ்டியன் '' கூட வரவில்லை. கனம் முதலமைச்சரவர்கள் அன்று கூறுகிறபொழுது ஒரு மணிக்கு ரூ. 3,500 ஆகிறது என்று சொன்னார். '' ஒர்க்கிங் டேஸ் '' கேல்குலேட் பண்ணினால் ஒரு மணிக்கு ரூ. 3,500 ஆகிறது. அது உண்மையிலே மதிக்க வேண்டிய தொகைதான். வினாக்களுக்கான அந்த 1 மணி நேரம் இழப்பது என்பது பொதுமக்களுக்குப் பெரும் நஷ்டம் என்பதை உங்களுக்கு வலியுறுத்த விரும்புகிறேன். மாக்ஸிமம் டேஸ் 42 நாள் கொடுக்க வேண்டும். டிபார்ட்மென்ட்டில் 42 நாட்களை மினிமமாக எடுத்துக் கொள்கிறார்கள். அதனால்தான் தகராறு. ஆகவே, தயவு செய்து அடுத்த மீட்டிங்கிலாவது வினாக்கள் வர ஏற்பாடு செய்ய வேண்டும். அத்துடன் ரூல்ஸ் கமிட்டியை சீக்கிரமாக '' கான்ஸ்டிடியூட் '' பண்ணி, சீக்கிரமாக வினாக்கள் வர ஏற்பாடு செய்ய வேண்டும். பொது மக்களுக்கு இதனால் ஏற்படும் பெரிய நஷ்டத்தை—இன்பர்மேஷன் கிடைக்காததால் ஏற்படும் நஷ்டத்தை—நாம் அனுமதிக்கக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முன்பு 1967 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 1 ஆம் தேதி உறுப்பினர்கள் சட்டமன்றத்திலே பதவிப் பிரமாணம் எடுத்தும், 1967 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 28-ஆம் தேதி அன்று இரண்டே இரண்டு கேள்விகளுக்குத்தான் பதில் சொல்ல முடிந்தது. நீங்கள், அந்தந்த இலாக்காக்களிலே உள்ள அதிகாரிகள் 42 நாட்களை மினிமமாக வைத்துக்கொள்ளாமல் குறுகிய காலத்தில் வினாக்களுக்கு விடைகளை அனுப்ப வேண்டுமென்று சொல்கிறீர்கள். அதைப்பற்றி ஏற்கனவே சொல்லியாகிவிட்டது. நடைமுறையில் கேள்விகளுக்குப் பதில் சேகரிக்கக் கால தாமதம் ஆகலாம். ஆனால் துரிதப்படுத்த அறிவுரை கூறலாமே தவிர, பாய்ன்ட் ஆஃப் ஆர்டரின் கீழ் என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை. இருந்தாலும் நான் கவனிக்கிறேன்.

(2) அறிவிப்பு.

ஆளுநர் அவர்களிடமிருந்து வந்துள்ள செய்தி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து 1977 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 18-ஆம் நாளிட்ட கீழ்க்காணும் செய்தி வரப் பெற்றது என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

" நான் 1977 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 7ஆம் தேதியன்று சட்டமன்றக் கூட்டத்தைத் துவக்கி வைத்து நிகழ்த்திய உரைக்கென சட்டமன்றப் பேரவை நிறைவேற்றியுள்ள நன்றியறிவிப்புத் தீர்மானம் கிடைக்கப் பெற்றமைக்கு எனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். "

அடுத்து, 1977-78 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பேரவைக்கு அளிப்பார்கள்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS